21.03.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பயிர்க் காப்பீடு திட்டம்:வங்கி, காப்பீட்டு அதிகாரிகளை நாளை சந்திக்கிறார் பிரதமர் மோடி

பிரதமர் பயிர்க் காப்பீட்டு திட்டத்தை (பிஎம்எஃப்பிஒய்) அமல்படுத்துவது தொடர்பாக வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களின் உயர் அதிகாரிகளை பிரதமர் நரேந்திர மோடி செவ்வாய்க்கிழமை சந்திக்க உள்ளார்.

மும்பையில் உள்ள நபார்டு அலுவலகத்தில் மோடி தலைமையில் நடைபெற உள்ள இந்தச் சந்திப்பில், மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி, நிதித்துறை மற்றும் வேளாண்துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள் கலந்துகொள்ள உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கான பிரீமியத் தொகையானது 2 சதவீதம் வரையில் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன், முதிர்ச்சிக் காலத்தில் காப்பீட்டுத் தொகையும் விரைவில் ஒப்படைக்கப்படும். இத்திட்டம் ஏப்ரல் 1ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

இத்திட்டமானது கடன் பெற்றுள்ள மற்றும் பெறாத விவசாயிகளுக்கும் பொருந்தும் நிலையில், கடன் பெற்றுள்ள விவசாயிகளை அதிகமாக இத்திட்டத்துக்கு உள்படுத்துவது தொடர்பாக இச்சந்திப்பின்போது கலந்தாலோசிக்கப்பட உள்ளது.

இதன்மூலம் 50 சதவீத விளை நிலங்களையும், அதிக விவசாயிகளையும் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வரும் இலக்கை எட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது 19.44 கோடி ஹெக்டேர் அளவிலான விளை நிலங்களில், ஏறத்தாழ 25 சதவீதம் மட்டுமே காப்பீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பூண்டி ஒன்றியத்தில் சாமந்திப் பூ விளைச்சல் அமோகம்



திருவள்ளூரை அடுத்த பூண்டி ஒன்றியத்துக்கு உள்பட்ட பூண்டி, மோவூர், புல்லரம்பாக்கம், நெய்வேலி ஆகிய பகுதிகளில் சாமந்திப்பூ விளைச்சல் அமோகமாக உள்ளது.

திருவள்ளூர் உழவர் சந்தை அருகே உள்ள பூ மார்க்கெட்டில் சாமந்திப் பூ விற்பனை அமோகமாக உள்ளது.

இங்கு சாமந்திப்பூ பூண்டி ஒன்றியத்தில் இருந்து விற்பனைக்கு வரவழைக்கப்படுகிறது.

இந்த சாமந்திப்பூ திருவள்ளூருக்கு மட்டுமல்லாமல் கோயம்பேடு மார்க்கெட்டுக்கும் பூண்டி ஒன்றியத்தில் இருந்து பெருமளவில் வந்தவண்ணம் உள்ளது. தற்போது விளைச்சல் நல்ல நிலையில் இருப்பதால் ஒரு கிலோ ரூ. 120 முதல் 150 வரை சில்லறையில் விற்கப்படுகிறது. வியாபாரமும் விறுவிறுப்பாக உள்ளதாக பூ வியாபாரிகள் தெரிவித்தனர்.

**வரத்து அதிகரிப்பால் காய்கறி விலை குறைவு**

மதுரை மாட்டுத்தாவணி காய்கறி சந்தைக்கு, காய்கறி வரத்து அதிகரித்திருந்ததால் ஞாயிற்றுக்கிழமை விலை குறைந்து காணப்பட்டது.

இங்கு, கடந்த சில வாரங்களாக காய்கறி விலைகளில் பெரிய மாற்றம் ஏதும் இல்லை. இந்நிலையில் கிலோவுக்கு ரூ.5 வரை மலிவாக விற்கப்பட்ட நாட்டுத் தக்காளி, ஒரு ரூபாய் கூடுதலாக ரூ.6-க்கு விற்கப்படுகிறது. பெங்களூரு தக்காளி கிலோ ரூ.10-க்கு விற்கப்படுகிறது. கேரட், பீன்ஸ் விலை மட்டும் ரூ.20-இல் இருந்து ரூ.35 ஆக உயர்ந்துள்ளது. உருளைக்கிழங்கு விலை கிலோ ரூ.30, அவரைக்காய் விலை கிலோ ரூ.32, பட்டர்பீன்ஸ், சோயா பீன்ஸ் ரூ.50-க்கும், காலிபிளவர் ஒன்று ரூ.20-க்கும், முட்டைக்கோஸ் கிலோ ரூ.15, முருங்கைக்காய் கிலோ ரூ.40-க்கும் விற்கப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

அதே சமயம் பெரிய வெங்காயம் ரூ.10-லிருந்து ரூ.16 ஆகவும், சிறிய வெங்காயம் ரூ.12-லிருந்து ரூ.22 ஆகவும் உயர்ந்துள்ளது. கிலோ ரூ.30 ஆக இருந்த தேங்காய் விலையில் ரூ.3.50 குறைந்துள்ளது. அடுத்து வரும் மாதங்களில் முகூர்த்த நாள்கள் அதிகமாக இருப்பதாலும், மதுரை சித்திரைத் திருவிழா நெருங்குவதாலும் காய்கறி விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

பூவிலையும் குறைவு: மதுரை மாட்டுத்தாவணி சந்தைக்கு பூக்கள் வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி கடந்த வாரம் கிலோ ரூ.150-க்கு விற்கப்பட்ட மல்லிப்பூ தற்போது ரூ.100-க்கு விற்கப்பட்டது. ரூ.300-க்கு விற்கப்பட்ட கனகாம்பரம் ரூ.200 ஆக குறைந்துள்ளது. இதேபோல் ரூ.350-க்கு விற்கப்பட்ட முல்லைப் பூவின் விலை ரூ.300 ஆக குறைந்துள்ளது. மெட்ராஸ் மல்லி ரூ.100, ரோஜா ரூ.150, கோழி கொண்டைப் பூ ரூ.40, அரளி ரூ.120, செவ்வந்தி ரூ.50, பட்டர் ரோஸ் ரூ.80, சம்பை ரூ.80, விருச்சிகப் பூ ரூ.110-க்கும் விற்கப்பட்டது.

## விவசாய கல்லூரிக்கு மாணவர்கள் களப்பயணம்

தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளி மாணவ, மாணவியர் களப் பயணமாக விசாலயன் கோட்டையில் உள்ள சேது பாஸ்கரா விவசாய கல்லூரிக்கு சனிக்கிழமை சென்றனர்.

இப்பள்ளியில் 1ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணவர்களும் இதில் பங்கேற்றனர். கல்லூரி வணிகப் பிரிவு மேலாளர் தமிழரசன் வரவேற்றார். கல்லூரி கல்வித் தலைவர் ஐராணி சேது தலைமை வகித்தார். கல்லூரி டீன் பேபி ராணி, பள்ளித் தலைமை ஆசிரியர் சொக்கலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி பண்ணை மேலாளர் சதீஷ்குமார், பேராசியர் மகேந்திரன் ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர்.

## ஆர் எஸ் மங்கலம் மிளகாய் சந்தையில் விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

திருவாடானை தாலுகா ஆர் எஸ் மங்கலத்தில் சனிக்கிழமை நடைபெற்ற வாரச்சந்தையில் மிளகாய் விலை ஏற்றம் கண்டதால் விவசாயிகள் மகிழச்சி அடைந்தனர்.

திருவாடானை தாலுகா ஆர் எஸ் மங்கலம் ஒன்றியத்தில் நெல் விவசாயத்திற்கு பிறகு சுமார் 500ஏக்கர் நிலப்பரளவில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இங்கு விளையும் குண்டு மிளகாய் அதிக காரம் இருப்பதால் வெளி மாவட்டத்தில் அதிக கிராக்கி உண்டு. இதனால் வெளி மாவட்ட வியாபாரிகள் இங்கு வந்து மிளகாய் வாங்கிச் செல்வது வழக்கம்.

இந்த வாரம் சனிக்கிழமை நடைபெற்ற மிளகாய் சந்தையில் முதல் ரகம் குவிண்டால் ரூ.12 ஆயிரத்து 500லிருந்து ரூ.1000அதிகரித்து ரூ.13ஆயிரத்து 500க்கும், இரண்டாவது ரகம் ரூ.11ஆயிரத்திலிருந்து ரூ.1000 அதிகிரித்து ரூ.12ஆயிரத்திற்கும் விற்பனை ஆனது. இதனால் மிளகாய் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## ரூ. 8 லட்சத்துக்கு வாழைத்தார்கள் ஏலம்

கோபியில் நடைபெற்ற ஏலத்தில் மொத்தம் ரூ. 8 லட்சத்துக்கு வாழைத்தார்கள் ஏலம்போயின.

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வாரம்தோறும் சனிக்கிழமை வாழைத்தார், தேங்காய் ஏல விற்பனை நடைபெற்று வருகிறது.

இந்த வாரம் சனிக்கிழமை நடைபெற்ற வாழைத்தார் ஏல விற்பனை விவரம்:

ஒரு கிலோ கதளி ரூ.18.50, நேந்திரன் கிலோ ரூ.23-க்கு விற்பனை ஆனது. வாழைத்தார் செவ்வாழை ரூ.350, ரஸ்தாளி ரூ.300, தேன்வாழை ரூ.300, ரோபஸ்டா ரூ.200, பூவன் ரூ.250, மொந்தன் ரூ.180, பச்சைநாடான் ரூ.150 என விற்பனை ஆனது.

இந்த ஏலத்துக்கு 11,000 வாழைத்தார்களை விவசாயிகள் கொண்டு வந்தனர். மொத்தம் ரூ. 8 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

தேங்காய் ஏலம்: தேங்காய் ஏலத்துக்கு 7,000 தேங்காய்கள் கொண்டுவரப்பட்டன.

தேங்காய் அதிகபட்ச விலையாக ரூ.9.50க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ. 4-க்கும் ஏலம்போனது. மொத்தம் ரூ.55,000-க்கு தேங்காய் ஏலம் நடைபெற்றது.

## ரூ. 80 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில், ரூ. 80 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்போனது.

பெருந்துறை மற்றும் சுற்றுப்பகுதி விவசாயிகள், 3,370 மூட்டைகளில் 1,63,000 கிலோ கொப்பரையைக் கொண்டு வந்திருந்தனர். இதில், முதல்

தரக் கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ.51.35க்கும், அதிகபட்சமாக ரூ. 54.05க்கும் விற்பனை ஆனது.

இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ. 30.65க்கும், அதிகபட்சமாக ரூ.50.35க்கும் ஏலம் போனது.

மொத்தம் ரூ. 80 லட்சத்துக்கு இந்த ஏலம் நடைபெற்றதாக இச்சங்கத் தலைவர் அருள்ஜோதி கே. செல்வராஜ் தெரிவித்தார்.

## போச்சம்பள்ளியில் தர்ப்பூசணி விற்பனை அமோகம்

கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், உடலை வெப்ப சமநிலையில் வைத்து கொள்வதற்காக தர்ப்பூசணி, நுங்கு, மோர் என பல்வேறு இயற்கை உபாயங்களைத் தேடி வருகின்றனர்.

அந்த வகையில், கோடைக் காலத்திற்கென்றே உருவாகும் தனித்துவமான தர்ப்பூசணி பழங்களின் விற்பனை அதிகரித்துள்ளது. போச்சம்பள்ளி கடை வீதிகளில் தள்ளுவண்டி, நடைபாதை வியாபாரிகள் அனைவரும் தர்ப்பூசணி விற்பனையை ஆர்வமுடன் நடத்தி வருகின்றனர்.

ஒரு கிலோ தர்ப்பூசணி ரூ.20 முதல் 25 வரை விற்பனை செய்யப்படுகிறது. தர்ப்பூசணி பழங்களை மொத்தமாக கொள்முதல் செய்து வந்து வியாபாரம் செய்து வருகின்றனர்.

இதில் அதிக அளவு நீர்ச்சத்து, பொட்டாசியம் தாதுக்கள் அதிகம் நிறைந்துள்ளதால், கோடை பாதிப்பிலிருந்து உடலைப் பாதுகாக்க தர்ப்பூசணி அதிகம் உண்ண வேண்டும் என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

## தலைவாசல் பகுதியில் வறட்சி: மாற்றுப் பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள்

தலைவாசலை அடுத்த பெரியேரி பகுதியில் கடும் வறட்சி காரணமாக விவசாயிகள் மாற்றுப் பயிரை சாகுபடி செய்து வருகின்றனர்.

சேலம் மாவட்டம், தலைவாசலை அடுத்த பெரியேரி பகுதியில் வறட்சி காரணமாக விவசாயிகள் மாற்றுப் பயிரை சாகுபடி செய்து பருவத்துக்கு தகுந்தாற்போல தங்களை மாற்றிக்கொண்டுள்ளனர்.

இதுகுறித்து விவசாயி செங்கோடன் கூறியது:

இந்தப் பகுதியில் நிகழாண்டும் மழை பொய்த்து விட்டது. இதனால் மஞ்சள், வாழை, நெல், காய்கறிகளை சாகுபடி செய்து வந்த நாங்கள் தற்போது மாற்றுப் பயிரை சாகுபடி செய்யத் தொடங்கியுள்ளோம். தற்போது வறட்சிக் காரணமாக பங்குனி மாதத்திலேயே கடும் வெயில் இருந்து வருவதால் கிணற்று நீர் விரைவில் வற்றி விடும். ஆகையால் பப்பாளிக் கன்றுகளை நட்டு வைத்து அதில் ஊடுப் பயிராக சாமந்திப்பூ பயிரிட்டு உள்ளோம். பப்பாளி வளர்வது வரை செலவுக்கு சாமந்திப்பூ கைக்கொடுக்கும் என்றார்.

## சேரனூர் கிராமத்தில் பயிர் பாதுகாப்பு பயிற்சி

பொன்னமராவதி அருகே உள்ள சேரனூர் கிராமத்தில் நிலக்கடலை விவசாயிகளுக்கு பயிரில் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு குறித்த பயிற்சி வெள்ளிக்கிழமை அளிக்கப்பட்டது.

தமிழக வேளாண் துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களில் பண்ணைப்பள்ளி திட்டமும் ஒன்றாகும். அதன்படி பொன்னமராவதி வட்டாரத்தில் நடப்பு நிதியாண்டில் நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்த பண்ணைப்பள்ளி மூலம் சேரனூர் கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு வாரந்தோறும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.பயிற்சிக்கு வேளாண் உதவி இயக்குநர் சி. ஜெயபாலன் தலைமை வகித்தார். புதுகை வேளாண் துணை இயக்குநர் சதானந்தம் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று நிலக்கடலை

உற்பத்தியின் முக்கியத்துவம் மற்றும் எண்ணெய்வித்து பயிர்களின் மகசூலை பெருக்க வேண்டியதன் அவசியம் குறித்துப் பேசினார்.

முன்னதாக வேளாண் அலுவலர் கவிதா மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேவி ஆகியோர் பூச்சி மற்றும் நோய்கள் பாதிப்பு மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து பயிற்சியளித்தனர். ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் ராஜூ, நீர்ப்பாசன சங்க தலைவர் பழனிச்சாமி ஆகியோர் செய்திருந்தனர்.

## தஞ்சாவூரில் நாளை வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி

நாகப்பட்டினத்தில் வெள்ளாடு வளர்ப்பு தொடர்பாக இலவச ஒருநாள் பயிற்சி முகாம் புதன்கிழமை (மார்ச் 23) நடைபெற உள்ளது.

இதுகுறித்து நாகப்பட்டினம் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாகப்பட்டினம் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ, அறிவியல் பல்கலைக்கழகத்தின் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் புதன்கிழமை காலை 10 மணியளவில் வெள்ளாடு வளர்ப்பு என்னும் தலைப்பில் இலவச ஒருநாள் பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.

பயிற்சியில் வெள்ளாட்டினங்கள், இடத்தேர்வு, கொட்டகை அமைக்கும் முறை, தீவன பராமரிப்பு, நோய்த் தடுப்பு மற்றும் பண்ணை பொருளாதாரம் போன்ற தலைப்புகளில் பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன. பயிற்சி முகாமில் பங்கேற்க விரும்புவோர் நேரிலோ அல்லது 04364-247123 என்ற தொலைபேசி எண்ணிலோ, கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தை அணுகலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

## நாகை மாவட்டத்தில் 26 லட்சம் டன் நெல் கொள்முதல்: ஆட்சியர்

நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் நாகை மாவட்டத்தில் நிகழ் பருவத்தில் 26.7 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் சு. பழனிசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

2015- 16-ஆம் ஆண்டின் கே.எம்.எஸ். காரீப் பருவ நெல் கொள்முதலுக்காக நாகை மாவட்டத்தில், நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் 283 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, இதுவரை 26,72,255 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

வேளாண் இணை இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைப்படி, நெல் வரத்து இல்லாத கொள்முதல் நிலையங்களைக் கண்டறிந்து மார்ச் 3-ஆம் தேதி 83 கொள்முதல் நிலையங்களும், மார்ச் 7-ஆம் தேதி 50 கொள்முதல் நிலையங்களும், மார்ச் 17-ஆம் தேதி 54 கொள்முதல் நிலையங்களும் மூடப்பட்டன.

நெல் அறுவடைப் பணிகள் நடைபெறும் பகுதிகளில் தற்போது 93 கொள்முதல் நிலையங்கள் செயல்பாட்டில் உள்ளன. கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான தொகை தொடர்புடைய விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

இலுப்பூர் பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் மூடப்பட்ட பின்னர், விவசாயிகள் விடுத்த கோரிக்கையை ஏற்று மீண்டும் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

ஆதனூர், ஆயக்காரன்புலம் ஆகிய பகுதிகளில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கூடுதலாக சுமை தூக்கும் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டு, கொள்முதல் பணிகள் தொய்வின்றி நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொள்முதல் நிலையங்களுக்கு நெல் மூட்டைகளைக் கொண்டு வர இயலாத பகுதிகளில் அறுவடைப் பணிகள் நடைபெற்றால், நடமாடும் கொள்முதல் நிலையங்கள் மூலம் உடனுக்குடன் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஆட்சியர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**வேளாண் இடுபொருள் வர்த்தகர் சங்கக் கூட்டம்**

வேளாண் இடுபொருள் வர்த்தகர்கள் சங்க மாவட்ட பொதுக் குழுக் கூட்டம் விழுப்புரத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண் இடுபொருள் வியாபாரிகள் சங்க மாநிலத் துணைத் தலைவர் எம்.மோகன் தலைமை வகித்தார்.

விழுப்புரம் மாவட்ட வேளாண் இடுபொருள் வியாபாரிகள் சங்கத் தலைவர் பி.ஆர். ராஜேந்திரன், செயலாளர் டி.நடராஜன், பொருளாளர் ஆர்.கே. கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழுப்புரம் மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) ஜி.தாமோதரன், கோலியனூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.ஜெ.கென்னடி ஜெபக்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மாநிலத் துணைத் தலைவர் ஆர்.பாண்டியன், துணைச் செயலாளர்கள் யாசின் மௌலானா, அருண், வெங்கடேசன், செயற்குழு உறுப்பினர்கள் ராஜேந்திரன், கருணாகரன், சரவணன் உள்ளிடோர் பங்கேற்றனர்.

வேளாண் இடுபொருள் வர்த்தகர்களுக்கு இடுபொருள் விற்பனையின் போது வழங்கப்படும்

2 சதவீத கமிஷனை 5 சதவீதமாக உயர்த்த வேண்டும்.

வெளி மாநிலங்கள், வெளி மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்படும் உரங்களை கடைகளுக்கு கொண்டு வந்து சேர்க்கும் வரை போக்குவரத்து செலவை முழுமையாக அரசு ஏற்க வேண்டும். புதிதாக அமல்படுத்த உள்ள வேளாண் இடுபொருள்களுக்கான நேரடி மானியத்தை மத்திய அரசு கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நிலக்கடலை விளைச்சல் அதிகரிப்பால் விவசாயிகள் மகிழ்ச்சி:விதைகளை சேமிக்க ஒழுங்குமுறை கூடம் அவசியம்**

கீழக்கரை:திருப்புல்லாணி ஒன்றியத்திற்குட்பட்ட களிமண்குண்டு, சிட்டாங்காடு, வண்ணாங்குண்டு, பெரியபட்டினம், உத்தரவை, சின்னாண்டிவலசை, வைரவன்கோயில் உள்ளிட்ட பகுதிகளில் நிலக்கடலை விளைச்சல் அமோகமாக மகசூல் ஈட்டி வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். குறைந்த நீர்வளமும், வறட்சியை தாங்கும் தன்மை கொண்ட நிலக்கடலை பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். வி.ஆர்.ஐ-1, கோ-1, டி.எம்.வி.-7, டி.எம்.வி-13 ஆகிய ரகங்களை விவசாயத்துறையினர் அறிமுகம் செய்துள்ளனர். விதைத்த 45 நாட்களுக்குள் வேரில் கடலைகள், அதிகளவில் திரட்சியாகின்றன.

கடற்கரை, பனைமரங்கள் சூழ்ந்த அதிக மணற்பாங்கான இடங்களில் நிலக்கடலை பயிரிட்டுவருகின்றனர். வேர் எளிதில் இறங்குவதும், தண்ணீரை தக்கவைத்துக்கொள்வதும் எளிதாக அமைகிறது.

விவசாயிகள் முனியசாமி, கார்மேகம் கூறியதாவது:இப்பகுதியில் விளையும் நிலக்கடலையை, மதுரை வியாபாரிகளிடம் மொத்தமாக விற்பனை செய்கிறோம். நாங்கள் விதைக்கான கடலையை கிலோ ரூ.60க்கு கொள்முதல் செய்கிறோம். கடைகளுக்கு படி ரூ.35க்கு விற்பனை செய்கிறோம். இடைத்தரகர்களால் விவசாயிகள் பாதிப்படைகின்றனர். எனவே, அரசு தரமான விதைக்கடலையை விவசாயிகளுக்கு வழங்கிட, சம்பந்தப்பட்ட ஒன்றியங்களில் உள்ள அரசின் ஒழுங்குமுறை கூடத்தில் சேமித்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நிலக்கடலை விவசாயத்தை இப்பகுதியில் ஊக்கப்படுத்த

வேண்டும் என்றனர். திருப்புல்லாணி வேளாண்மை அலுவலர் ஒருவர் கூறுகையில், நிலக்கடலைக்கு தழைச்சத்து, மணிச்சத்து தேவை. டி.ஏ.பி., உரத்தை வேர்ப்பகுதியில் 1 ஏக்கருக்கு 200 கிலோ வீதம் இட்டால் அதிக மகசூலை ஈட்டலாம். முதல் தர விதைகளை பெற விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி ஆலோசனை பெறலாம், என்றார்.

பாரம்பரியவெள்ளரிக்காய்

வெயிலுக்கு வெள்ளரிக்காய் குளிர்ச்சியை தரும்.கண்மாய்களில் தண்ணீர் வற்றும் போது வெள்ளரிக்காய்பயிரிடப்படும். தற்போது கண்மாய்கள் எப்போதுமே வறண்டு இருப்பதால் ஆண்டின் எல்லாக் காலங்களிலும் வெள்ளரி பயிரிடப்படுகிறது. வறட்சிப் பகுதியில் விளைவிக்கப்படும் வெள்ளரிக்காய் சுவை மிகுந்தது. ராமநாதபுரத்தில் சக்கரக்கோட்டை கண்மாயில் விளைவிக்கப்படும் 'சக்கரக்கோட்டை வெள்ளரிக்காய்' மிக பிரபலமாக இருந்தது.கல்லுப்பட்டி, கோவில்பட்டி, சாத்துாரிலும் வெள்ளரிக்காய் பிரபலம். வெள்ளரியில் பிஞ்சு சிறந்தது. வெள்ளரிப்பழத்தில் நாட்டுச் சர்க்கரை சேர்த்து குளிர்ச்சிக்காக உண்பர்.

## கோழிகளுக்கு கழிச்சல்: கட்டுப்படுத்த ஆலோசனை

மொடக்குறிச்சி: கோடையில் கோழிகளுக்கு ஏற்படும் வெள்ளைக்கழிச்சல் நோயை கட்டுப்படுத்த, பண்ணையாளர்களுக்கு, அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து ஈரோடு மண்டல கால்நடை இணை இயக்குனர் ரவிச்சந்திரன் கூறியதாவது: வெள்ளைக்கழிச்சல் நோயானது கோடை காலத்தில், எல்லா வகையான கோழிகளையும் எளிதில் தாக்கி கொல்லக்கூடியது. முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் தடுப்பூசியே இதற்கு மருந்தாகும். இந்நோய் தாக்கிய கோழிகள் வெள்ளை மற்றும் பச்சை நிறத்தில் கழிச்சல் போகும். தலையை ஒரு பக்கமாக இழுத்தவாறு காணப்படும். கழுத்து முருக்கல், தலை திருகல், பின்னோக்கி தள்ளாடி நடத்தல், இரை எடுக்காமல் இருக்கும். இவற்றை கொண்டு எளிதாக

கண்டு பிடிக்கலாம். இதை தடுக்க கோழிக் குஞ்சுகளுக்கு ஏழாவது நாளில், ஆர்.டி.வி.எப்., என்னும் தடுப்பு மருந்தை கண் மற்றும் நாசி வழியாக சொட்டு மருந்தாக கொடுக்கலாம். லேசேட்டோ என்ற தடுப்பு மருந்தை, 21 நாளில் வாய் வழியாகவும் கண் வழியாகவும் வழங்கலாம். ஆர்.டி.வி.கே., தடுப்பூசியை, 75வது நாளில் ஊசி மூலம் செலுத்தலாம். இதற்காக கால்நடை மருத்துவமனைகளில் சனிக்கிழமை தோறும் இலவசமாக தடுப்பூசி போடப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## சாலையோரம் பூத்துள்ள 'ஜெகரண்டா' மலர்கள்

கூடலூர்: கூடலூரில் சாலையோரம் பூத்துக் குலுங்கும் 'ஜெகரண்டா' மலர்கள், சுற்றுலா பயணிகளை கவர்ந்து வருகின்றன.

கூடலூர் பகுதியில் கோடை காலங்களில், சாலையோரங்களில் உள்ள சில மரங்களில் பூக்கும் வண்ண மலர்கள், சுற்றுலா பயணிகளை கவர்ந்து வருகின்றன. தற்போது, பெரும்பாலான மரங்களில், ஜெகரண்டா மலர்கள் பூத்துள்ளன. கேரளா, கர்நாடகா மாநில சுற்றுலா பயணிகள், இதனை ரசித்து, 'போட்டோ' எடுத்து செல்கின்றனர்.

## மண் வள அட்டை: வேகம் காட்டும் வேளாண் அதிகாரிகள்

திண்டுக்கல்:திண்டுக்கல்லில் 2ம் கட்டமாக மண் வள அட்டை வழங்க, மண் மாதிரிகள் ஆய்வு செய்யும் பணிகள் வேகமாக நடந்து வருகிறது.

மண்வளத்தை பற்றி முழுமையாக அறிந்து கொள்ளுதல் , அந்தந்த பகுதி மண்ணின் தன்மை, அதிலுள்ள சத்துக்களின் விவரங்களை அட்டவணைப்படுத்தி, என்ன பயிர் விளைவிக்கலாம் என்பதை குறிக்கும் மண் வள அட்டை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இதன் மூலம் மண்ணின் தன்மைக்கேற்ப உரமிடலாம். அதனால் விளைச்சல் அதிகரிக்கும். எனவே ஒவ்வொரு விவசாயியும் தங்கள் நிலத்தில் மண் மாதிரி பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.

மத்திய அரசு மண்வள அட்டை திட்டத்தை இந்தியா முழுவதும் கடந்த ஆண்டு நடைமுறைப் படுத்த ஆணையிட்டது. இதனடிப்படையில் திண்டுக்கல்லில் இதுவரை 10 ஆயிரத்து 540 மண்மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு மண்வள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

இம்மாத இறுதிக்குள் மண் வள அட்டை வழங்க உத்தரவிட்டுள்ளதால், 2ம் கட்டமாக மண் பரிசோதனை ஆய்வு செய்து, விவசாயிகளுக்கு வழங்க பணிகள் வேகமாக நடந்து வருகின்றது.

## இயற்கை விவசாயம் ஆலோசனை கூட்டம்

விழுப்புரம்:விழுப்புரம் அடுத்த மேலக்கொந்தை கிராமத்தில், இயற்கை விவசாயம் குறித்த ஆலோசனை கூட்டம் நடந்தது.

சுவாசம் அறக்கட்டளை சார்பில் நடந்த கூட்டத்திற்கு பொருளாளர் ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். முன்னோடி இயற்கை விவசாயி சுப்ரமணியன் வரவேற்றார். ராதாகிருஷ்ணன், சுப்ரமணி ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஓய்வுபெற்ற மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் சீத்தாராமன் விளக்கவுரையாற்றினார். நுகர்வோர் தேவை, கொள்முதல் குறித்து ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் பேசினர். ஜனார்த்தனன் நன்றி கூறினார்.

## அமராவதி அணை பராமரிப்பு பணி: நீர்ப்பாசன இயக்கம் எதிர்பார்ப்பு

கரூர்: "அமராவதி ஆற்றில் நீர்மட்டம் குறைந்து வருவதால், அணை பராமரிப்பு பணியை துரிதப்படுத்த வேண்டும்," என்று, அமராவதி நீர்ப்பாசன இயக்க பொதுச்செயலாளர் சின்னசாமி கூறினார்.

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அருகே அமராவதி அணை உள்ளது. இதன் மொத்த உயரம், 90 அடி. அணையில் இருந்து வெளியேறும் நீரின் மூலம், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டத்தில், 50 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. கரூர் மாவட்ட மக்களின்

குடிநீர் ஆதாரமாகவும் அமராவதி ஆறு உள்ள. நீர்பிடிப்பு பகுதிகளான தூவானம், பாம்பாறு, தேனாறு, சின்னாறு பகுதியில் இருந்து அமராவதிக்கு தண்ணீர் வருகிறது. இங்கிருந்து, 200க்கும் மேற்பட்ட கிலோ மீட்டர் பகுதிகளில் நுழைந்து முடிவில் திருமுக்கூடலூரில் கலக்கிறது.

இதுகுறித்து, அமராவதி நீர்ப்பாசன இயக்க பொதுச்செயலாளர் சின்னசாமி கூறியதாவது: அமராவதி அணை, 90 அடி கொள்ளளவு நீர் கொண்டாலும், வண்டல், களிமண் ஆகியவை, 20 அடி வரை உள்ளது. மொத்த கொள்ளளவில் நீர்த்தேக்கினாலும், 70 அடி நீர் வரை தான் முழுமையாக நிரம்பும். கோடை காலத்தில், தண்ணீர் வற்றிய பிறகு தான் வண்டல், களிமண்ணை அகற்ற முடியும். அதற்கும் பல்வேறு நிபந்தனைகளை அதிகாரிகள் விதித்துள்ளனர். அணை மராமத்துப்பணியும், அப்போது தான் நடக்க ஏதுவாக இருக்கும். அதற்கான பணிகளை அதிகாரிகள் துவங்க வேண்டும். ஆனால், கடந்த காலங்களிலும் சரி, தற்போதும் சரி, அமராவதி அணையை சுத்தப்படுத்தும் பணியிலோ, பராமரிப்பு பணியிலோ அதிகாரிகள் ஈடுபடவில்லை. இதனால், அமராவதி பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## நிலக்கடலை சாகுபடியில் ஒருங்கிணைந்த பாதுகாப்பு

பொன்னமராவதி, : பொன்னமராவதி வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலக்கடலை சாகுபடியில் ஒருங்கிணைந்த பாதுகாப்பு குறித்து விவசாயிகளுக்கு வேளாண் துறை சார்பில் செயல்

விளக்கம் அளிக்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாரத்தின் பல்வேறு பகுதிகளில் நிலக்கடலை சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்து பண்ணைப் பள்ளி நடத்தப்பட்டு வருகிறது. தமிழக வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டமான அட்மா திட்டத்தின் சார்பில் இப்பள்ளி நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதன்படி, பொன்னமராவதி வட்டாரத்தில் நடப்பு நிதி ஆண்டில் நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்த பண்ணைப் பள்ளி சேரனூர் கிராமத்தில் தற்போது துவங்கப்பட்டதோடு, வாரந்தோறும் விவசாயிகளுக்கு இதுதொடர்பாக சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன்படி நேற்று நடைபெற்ற செயல் விளக்க முகாமுக்கு வேளாண் உதவி இயக்குநர் ஜெயபாலன் தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற புதுக்கோட்டை வேளாண் துணை இயக்குநர் சதானந்தம், நிலக்கடலை உற்பத்தியின் முக்கியத்துவம், எண்ணெய்வித்து பயிர்களின் மகசூலை பெருக்க வேண்டியதன் அவசியத்தை விளக்கிக் கூறினார்.

இதே போல், வேளாண் அலுவலர் கவிதா, வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் தேவி ஆகியோர் பூச்சிகள் மற்றும் நோய்த் தாக்குதலால் நிலக்கடலையில் ஏற்படும் பாதிப்பு, அவற்றை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சியளித்தனர். முன்னதாக, முன்னோடி விவசாயி கணேசன் வரவேற்றார். முடிவில் உதவி தொழில்நுட்ப மேலாளர் பிரியங்கா நன்றி கூறினார்.இதற்கான ஏற்பாடுகளை உதவித் தொழில்நுட்ப மேலாளர் ராஜீ மற்றும் நீர்ப் பாசன சங்கத் தலைவர் பழனிச்சாமி ஆகியோர் செய்திருந்தனர்.

# எடையுடன் கூடிய மகசூல் பெற நீர் பாசனம் செய்யும் முறை

சேதுபாவாசத்திரம், : கரும்பு பயிரில் எடையுடன் கூடிய மகசூல் பெற நீர் பாசனம் செய்ய வேண்டிய பருவங்கள் குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: கரும்பு பயிர் நிமிர்ந்து நிற்பது, வெயிலின் தாக்கத்தால் வாடாமல் இருப்பது, வேர் மூலம் ஊட்டச்சத்துக்களை எடுத்து கொள்வது, ஒளி சேர்க்கை மூலம் சர்க்கரை மற்றும் மாவுப்பொருட்களை உற்பத்தி செய்வது, பயிரினுள் நடைபெறும் வேதியில் மாறுதலுக்கு நீர் முக்கிய பங்கு வகிக்கிறது.

வளரும் பயிரின் எடையில் 80 முதல் 85 சதவீதம் வரை நீர் உள்ளது. ஒரு டன் கரும்பு விளைவிக்க 125 டன் நீர் தேவைப்படுகிறது. ஒரு டன் சர்க்கரை உற்பத்தி செய்ய 1,350 டன் நீரை கரும்பு பயிர் எடுத்து கொள்கிறது. பாசன நீரை பருவத்தை பொருத்து பல்வேறு இடைவெளிகளில் 38 முதல் 40 முறை பாசனம் செய்ய வேண்டும். 1 முதல் 35 வரை நாட்களான முளைப்பு பருவத்தில் 7 நாட்கள் இடைவெளியில் 5 பாசனமும். 36 முதல் 100 நாட்கள் வரையிலான தூர் கட்டும் பருவத்தில் 10 நாட்கள் இடைவெளியில் 5 பாசனமும், 101 முதல் 270 நாட்கள் வரையான வளர்ச்சி பருவத்தில் 8 நாட்கள் இடைவெளியில் 21 பாசனம், 271 முதல் அறுவடை வரையிலான முதிர்ச்சி பருவத்தில் 13 நாட்கள் இடைவெளியில் 6 பாசனம் என மொத்தம் 38 முறை கரும்புக்கு பாசனம் செய்வதன் மூலம் நீர் சத்து நிறைந்த நல்ல எடையுடன் கூடிய அதிக சர்க்கரை, பிழிதிறன் கொண்ட கரும்பு நமக்கு மகசூலாக கிடைக்கிறது.

**மூலிகை பண்ணையை விரிவுப்படுத்த வேளாண் பல்கலை.யுடன் ஒப்பந்தம்**

தஞ்சை, : மூலிகை பண்ணையை 50 ஏக்கர் பரப்பளவில் விரிவுப்படுத்த தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட உள்ளதாக தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் பாஸ்கரன் தெரிவித்தார்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக சமூக அறிவியல் துறை சார்பில் இயற்கை சீற்றங்களை எதிர்கொள்ளும் தீர்வும், இளைஞர்களின் பங்கு என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது. இதில் தலைமை வகித்து துணைவேந்தர் பாஸ்கரன் பேசும்போது, இயற்கை பேரிடர் இறைவன் தருகிற எச்சரிக்கையாகும். எனவே அவைகளை உணர்ந்து நம்மை பாதுகாத்து கொள்ள வேண்டும். அதற்காக இளைஞர்களாக நீங்கள் தயார்படுத்தி கொள்ள வேண்டும். இதுபோன்ற பேரிடர் காலங்களில் பேரிடர் மேலாண்மை இயக்கத்தோடு தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்கள் களத்தில் இறங்கி இணைந்து செயல்பட வேண்டும்.

இயற்கை சீற்றத்துக்கு தனி மனிதனால் தீர்வுதர முடியாது. சமுதாயத்துடன் இளைஞர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டால் தான் இயற்கை பேரிடரை எதிர்கொள்ள முடியும். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தற்போது ஐந்தரை ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மூலிகை பண்ணையை 50 ஏக்கரில் விரிவுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவுள்ளது என்றார்.

கருத்தரங்கை துவக்கி வைத்து கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி பேசுகையில், அறிவு சார்ந்த ஆற்றலோடு செயல்படும்போது விஞ்ஞானம் நமக்கு வழிகாட்டும். பேரிடர் காலத்தில் ஏற்படுகிற அழிவை பாதுகாக்க கிழக்கு கடற்கரை சாலைகளில் மரம், செடிகளை அதிகம் வளர்க்க வேண்டும். நீர்நிலைகளை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். இந்தியாவில் தமிழகத்தில்

மட்டுமே தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை என 2 பருவங்களில் மழை பெய்கிறது. இம்மழை காலங்களில் கிடைக்கக்கூடிய தண்ணீரை ஏரி, குளங்களை அமைத்து சேமிக்க வேண்டும். வடிகால் நிலங்களை சரியாக வைத்து கொண்டால் நீரை சேமிக்கலாம் என்றார்.

கடலூர் கடற்கரையோர மக்கள் வாழ்வுரிமை இயக்க அமைப்பாளர் ரமேஷ்பாபு, தஞ்சை இந்திய செஞ்சிலுவை சங்கம் முதலுதவி பயிற்சியாளர் ஆகியோர் பேசினர். தமிழ் பல்கலைக்கழக பதிவாளர் விஞ்ஞானம், துறைத்தலைவர் சுப்பிரமணியன், உதவி பேராசிரியர் மதியழகன், லூயிஸ் திரவியல் பங்கேற்றனர்.

## வேளாண். விற்பனை கூடம் மூலம் ரூ.32 கோடிக்கு பருத்தி விற்பனை

நாகை, : நாகை மாவட்டத்தில் கடந்தாண்டு வேளாண் விற்பனை கூடங்கள் மூலம் ரூ.32 கோடிக்கு பருத்தி விற்பனை செய்யப்பட்டுள்ளது. நாகை விற்பனை குழுவின் கீழ் குத்தாலம், மயிலாடுதுறை, செம்பனார்கோவில், வேதாரண்யம், கீழ்வேளூர், சீர்காழி, நாகை, திருப்பூண்டி ஆகிய இடங்களில் ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த விற்பனை கூடங்களின் மூலம் கடந்த ஆண்டு ரூ.32 கோடி மதிப்புள்ள 6,800 டன் பருத்தியை விவசாயிகள் விற்பனை செய்து பயன்பெற்றுள்ளனர்.

ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் விவசாயிகள் தங்களது விளைபொருட்களை விற்பனை செய்வதால், சரியான எடை, போட்டி விலை, விரைவான பட்டுவாடா, கமிஷன், இடைத்தரகு இல்லாமல் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம். மாவட்டத்தில் உளுந்து, பச்சைப்பயறு, கடலை அறுவடை தற்போது தொடங்கி நடந்து வருகிறது. எனவே விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் மூலமாக விற்பனை செய்து பயன்பெறலாம் என நாகை விற்பனை குழு செயலாளர் தேவேந்திரன் தெரிவித்துள்ளார்.

## குஜிலியம்பாறை பகுதியில் கடும் வறட்சியிலும் சூரியகாந்தி பூக்கள் விளைச்சல் அமோகம் விவசாயிகள் மகிழ்ச்சி

குஜிலியம்பாறை, : குஜிலியம்பாறை பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்த நிலையிலும், சூரியகாந்தி பூக்கள் விளைச்சல் போதிய அளவு இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.திண்டுக்கல் மாவட்டத்தில், குஜிலியம்பாறை ஒன்றியம் மிகவும் வறட்சி பகுதியாகும். இங்கு பெரும்பாலானோர் விவசாயம் செய்தும், கால்நடைகளை வளர்த்தும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்ந்து வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக குஜிலியம்பாறை பகுதியில் பருவமழை பொய்த்து போனதால், இப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் முற்றிலும் குறைந்து விட்டது. இதனால் இப்பகுதி விவசாயிகள் விளைநிலங்களில் சூரிய காந்தி பயிரிட்டனர்.

எல்.புதூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி பழனிச்சாமி கூறுகையில், குஜிலியம்பாறை பகுதி விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளாக சூரியகாந்தி பூக்கள் விளைச்சலில் லாபம் அடைந்து வருகின்றனர். இதனால் தற்போது விளைநிலங்களில் சூரியகாந்தி பயிரிட்டுள்ளனர். ஒரு ஏக்கருக்கு 3 கிலோ சூரியகாந்தி காந்தி விதை விதைக்கப்பட்டு, தொழு உரம், நடவு, உழவு, களைஎடுத்தல், கரைபோடுவது மற்றும் அறுவை கூலி உட்பட ஒரு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் முதல் ரூ.20ஆயிரம் வரை செலவாகிறது.

ஒரு கிலோ சூரியகாந்தி விதை ரூ.400க்கு வாங்கப்படுகிறது. தொழுஉரம் நன்றாக அமைத்தால் ஒரு ஏக்கருக்கு 20 மூடைகள் விளைச்சல் வர வாய்ப்புள்ளது. ஒரு மூடை 80 கிலோ கொள்ளளவு கொண்டது. இவ்வாறு விளையும் சூரியகாந்தி பூக்களை ஒரு கிலோ ரூ.25 முதல் ரூ.27 வரை, திருப்பூர் மாவட்டம் வெள்ளக்கோவில் மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் ஒரு ஏக்கருக்கு செலவுகள் போக, ரூ.15

ஆயிரம் முதல் ரூ.20ஆயிரம் வரை சூரியகாந்தி விளைச்சலில் லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது என்றார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## நாமக்கல்லில் 100 டிகிரியை தாண்டிய வெயில்: தர்பூசணி பழங்கள் விற்பனை சூடுபிடித்தது



நாமக்கல்,

நாமக்கல்லில் 100 டிகிரியை தாண்டி வெயில் அடித்து வருகிறது. இதன் காரணமாக தர்பூசணி பழங்கள் விற்பனை சூடுபிடித்து உள்ளது.

100 டிகிரி வெயில்

நாமக்கல் மாவட்டத்தில் இந்த ஆண்டு தொடக்கம் முதலே வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்து வருகிறது. நாமக்கல் நகரை பொறுத்த வரையில் கடந்த வாரம் வெயில் 100 டிகிரியை தாண்டியது. இதனால் பொதுமக்கள் கடும் அவதி அடைந்தனர். சுட்டெரிக்கும் வெயிலில் இருந்து தங்களை காப்பாற்றி கொள்ள பொதுமக்கள் சாலைஓரம் விற்பனை செய்யப்படும் இளநீர், மோர், குளிர்பான வகைகளை வாங்கி குடிப்பதை காண முடிந்தது.

<u>தர்பூசணி விற்பனை சூடுபிடித்தது</u>

இதேபோல் வெயிலின் தாக்கம் அதிகரிக்க தொடங்கி விட்டதால் தர்பூசணி விற்பனையும் சூடுபிடிக்க தொடங்கியது. கடலூர் மாவட்டத்தில் இருந்து வாங்கி வரப்படும் தர்பூசணி பழங்கள் நாமக்கல்–திருச்சி ரோடு, மோகனூர் ரோடு, சேலம் ரோடு, திருச்செங்கோடு ரோடு பகுதிகளில் விற்பனைக்காக குவிக்கப்பட்டு உள்ளன.

இவை கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரை விற்பனை செய்யப்படுகின்றன. இதர பழங்களை ஒப்பிடும் போது தர்பூசணி பழங்கள் விலை குறைவாக இருப்பதாலும், தண்ணீர் தாகத்தை கட்டுப்படுத்துவதாகவும் இருப்பதால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை வயது வித்தியாசமின்றி தர்பூசணி பழங்களை வாங்கி சாப்பிடுவதை காண முடிந்தது. இப்போது வெயில் 100 டிகிரியை தாண்டிவிட்ட நிலையில் வருகிற ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வெயிலின் அளவு மேலும் அதிகரிக்கும் என பொதுமக்கள் தெரிவித்தனர்.

**கோத்தகிரி அருகே மசக்கல் கிராமத்தில் திராட்சை சாகுபடி அமோகம்**



கோத்தகிரி

கோத்தகிரி அருகே உள்ள மசக்கல் கிராமத்தில் திராட்சை சாகுபடி அமோகமாக நடைபெற்று வருகிறது.

<u>திராட்சை சாகுபடி</u>

கோத்தகிரி அருகே உள்ள கூக்கல்தொரை, மசக்கல் கிராமங்களில் பிரதான தொழிலாக விவசாயம் உள்ளது. இங்கு மலைப்பகுதி சீதோஷ்ண நிலையும், சமவெளி பகுதி சீதோஷ்ண நிலையும் நிலவி வருகிறது.

இதனால் இந்த கிராமங்களில் முட்டைகோஸ், காலிபிளவர், கேரட், பீட்ரூட், உருளைக்கிழங்கு, வெள்ளை பூண்டு, பீன்ஸ், மேரக்காய், பப்பாளி, எலுமிச்சை போன்றவற்றை அதிகளவில் பயிரிட்டு வருகிறார்கள். மசக்கல் கிராமத்தில் திராட்சை பயிரிடப்பட்டு உள்ளது. அதில் நல்ல லாபம் கிடைத்து வருகிறது. இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது:–

<u>95 நாட்களில் அறுவடை</u>

மதுரை, கம்பம், ஓசூர் பகுதிகளில் திராட்சை பயிரிடப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் மசக்கல் பகுதியில் திராட்சை பயிரிட முயற்சி செய்தேன். சுமார் 120 மீட்டர் நீளம், அகலங்கள் கொண்ட இடத்தில் பந்தல் அமைத்து 75 செ.மீ. சதுரத்தில் குழி எடுத்து 3 மீட்டர் இடைவெளியில் திராட்சை நாற்றுகளை நடவு செய்தேன்.

சாதாரணமாக 28 முதல் 30 டிகிரி வரை வெப்பமுள்ள சீதோஷ்ண நிலை இருந்தால் 3–வது வருடத்தில் திராட்சை கொடிகள் நன்று வளர்ந்து காய்த்து அறுவடைக்கு தயாராகும். அறுவடை செய்து முடிந்ததும் கவாத்து செய்து விட வேண்டும். பின்னர் உரம் மற்றும் தண்ணீர் பாய்ச்சினால் மட்டும் பொதுமானது. இதைத்தொடர்ந்து மீண்டும் 90 முதல் 95 நாட்களில் மீண்டும் திராட்சை செடிகள் அறுவடைக்கு தயாராகி விடும்.

<u>12 டன் திராட்சை</u>

ஒருமுறை நாற்றுகள் வைத்து சரியான முறையில் பராமரிப்பு செய்து வந்தால் சுமார் 35 முதல் 40 வருடங்களுக்கு செடிகள் தொடர்ந்து பயன் அளிக்கும். முறையாக கவாத்து பணி மட்டும் செய்தால் பொதுமானது.

மேலும் ஒரு ஏக்கர் திராட்சை தோட்டத்தில் இருந்து 12 டன் திராட்சை பழங்கள் கிடைக்கும். திராட்சை பழங்கள் கருப்பு மற்றும் பச்சை நிறங்களில் வளரும். இவை பெரும்பாலும் ஒயின் தயாரிக்க வெளிமாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் பழங்கள் கடைகளுக்கும் விற்பனைக்கு வாங்கி செல்கின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

**திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டில் பெரியவெங்காயம் விலை கடும் சரிவு**



திருப்பூர்,
திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டில் பெரிய வெங்காயம் விலை கடுமையாக சரிவடைந்துள்ளது.

<u>பெரிய வெங்காயம் விலை சரிவு</u>

திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டுக்கு மராட்டிய மாநிலத்தில் இருந்து பெரிய வெங்காயம் விற்பனைக்கு வருகிறது. கடந்த ஒரு மாதமாக பெரிய வெங்காயம் வரத்து அதிகரித்துள்ளதால் திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டில் சுமார் 100 டன் வெங்காயம் விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டுள்ளது. இதனால் கடந்த வாரம் வரை ரூ.14–க்கு விற்கப்பட்ட நல்ல தரமான பெரிய வெங்காயம் ஒரு கிலோ ரூ,10–க்கு விற்பனை செய்யப்பட்டது.

இது குறித்து வெங்காய மொத்த வியாபாரிகள் கூறியதாவது:–
பெரிய வெங்காயம் வரத்து அதிகரித்துள்ளதால் விலை மிகவும் குறைந்து ஒரு கிலோ ரூ.10–க்கு விற்கிறோம். இருந்தாலும் விற்பனை

குறைவாகவே இருக்கிறது. அதே போல திருப்பூர் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து சின்ன வெங்காயமும் அதிக அளவில் விற்பனைக்கு வந்துள்ளதால் ரூ.15–க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ சின்ன வெங்காயம் விலை குறைந்து ரூ.12–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இன்னும் ஒரு மாதத்துக்கு இதே நிலைதான் நீடிக்கும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

தக்காளி வரத்து அதிகம்

திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டுக்கு திருப்பூர் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து தக்காளி விற்பனைக்கு வருகிறது. தற்போது தக்காளி வரத்து அதிகரித்துள்ளதால் விலை மிகவும் குறைந்துள்ளது. இதனால் கடந்த வாரம் ரூ.70–க்கு விற்கப்பட்ட 14 கிலோ எடை கொண்ட ஒரு பெட்டி தக்காளி விலை ரூ.50 ஆக குறைந்திருந்தது. விலை குறைந்திருந்தாலும் விற்பனை சுமாராகவே இருந்தது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து விவசாயிகள் கூறும்போது, “தக்காளி உற்பத்தி அதிகரித்துள்ளதால் விலை மிகவும் குறைந்துவிட்டது. ஒரு கிலோ தக்காளி ரூ.3.50–க்கு தான் விற்கிறோம். இருந்தாலும் விற்பனை சுமாராகத்தான் உள்ளது. இந்த விலைக்கு விற்றால் எங்களுக்கு நஷ்டம் தான். இருந்தாலும் செடியில் பழுத்து கிடக்கும் தக்காளியை அப்படியே விட மனசு கேட்காததால் வந்த விலைக்கு விற்கிறோம்“ என்றனர்.